# வள்ளுவர் காட்டும் தலையாய தலைகள்

விஜயலட்சுமி இராமசாமி

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" — என்று ஔவையாரும்,
"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" — என்று இடைக்காடனாரும்,
பாடிய சிறப்பினைக் கொண்டது திருக்குறள்.
"வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"
"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவனைப் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை" — என்று
பாரதியாரும்,
"வள்ளுவன் தன்னைப் பெற்றதாய்
பெற்றதே வயம் பெரும்பயன்" என்று கவிஞர் பாரதிதாசனாலும் காட்டப்பட்ட சிறந்த புகழுடையவர் தான் திருவள்ளுவர்.

நாம் வாழக்கூடிய வாழ்க்கையில் தலையாய செய்திகளாக அறிந்து கொள்ள வேண்டியவை எவை? தலையாயது என்று சொல்லப்பட்டு வருவன எவை? தலையாயது இது என்று கடைப் பிடித்து. செயல்படுத்துவன எவை என்பதை வள்ளுவர், தமது குறளில் 21 இடங்களில் தெள்ளத் தெளிவாகக் காட்டியுள்ளார்.

தலை, ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் மிகமிக முக்கியம். தலை மனித உடம்பின் தலைமை தான். தலை என்று சொன்னாலே அதில் ஐம்புலன்களும் அடங்கும். தலையில்லாத மனிதனை மனிதன் என்று சொல்ல மாட்டோம். எனவே, மனிதன் என்று சொல்ல தலை மிகமிக அவசியம். இதேபோல் மனிதன் மனிதனாக வாழ, வள்ளுவர் காட்டியுள்ள 21-தலைகளும் மிகமிக அவசியம்

"தலை என்று முடியும் குறள்கள் இருபத்தியொன்று
தலையாய கருத்துக்களைச் சொல்லுகின்றன
சிலைபோன்ற செய்திகளைப் படித்திட வேண்டும்
நிலைபோன்ற வாழ்வினிலே அடைந்திட வேண்டும்"

என்பது போல், வள்ளுவர் கூறியுள்ள 1330 அருங்குறட்பாக்களில் 21 குறள்கள் தலை என்று முடியும் குறள்களாகும். தரமான கருத்துகளையும், சிலையில் வடித்தெடுத்தாற் போன்ற செய்திகளையும் நிலைபேறுள்ள நல்ல ஆழமான செய்திகளையும் இந்த 21-குறட்பாக்களும் நமக்குக் கொடுக்கின்றன.

**அதிகாரங்கள்** :

1. கடவுள் வாழ்த்து (9)
2. இல்வாழ்க்கை (43, 47)
3. வாழ்க்கைத் துணை நலம் (57)
4. பொறையுடைமை (151)
5. வாய்மை (295)
6. இன்னா செய்யாமை (317)
7. கொல்லாமை (322, 325)

பொருட்பாலில்,

8. கேள்வி (411)
9. பெரியாரைத் துணை கோடல் (444)
10. காலம் அறிதல் (488)
11. கண்ணோட்டம் (579)
12. வினைத்தூய்மை (657)
13. தூது (687)
14. நாடு (736)
15. படைமாட்சி (761)

16. தீ நட்பு (814)
17. இகல் (852)
18. பெரியாரைப் பிழையாமை (891)
19. உழவு (1031)

என்று 19 அதிகாரங்களில், தலை என்று முடியும் சொல்லோடு 21 குறட்பாக்களை நமக்குத் தந்துள்ளார். இதில், இல்வாழ்க்கை என்ற அதிகாரத்தில் இரண்டு குறட்பாக்களும், கொல்லாமை என்ற அதிகாரத்தில் இரண்டு குறட்பாக்களும் தலை என்று முடியும் குறட்பாக்களாக அமைந்துள்ளன.

**கடவுள் வாழ்த்து** : தலை என்றிருந்தால், அந்தத் தலை யாரை வணங்க வேண்டும். எத்தகைய குணம் கொண்டவர்களை வணங்கினால் சிறப்பு என்பதனை,

"கோளில் பொறியில் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை" (கடவுள் வாழ்த்து 9)

என்ற குறளில் கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தரும், தன்னுடைய தேவாரப் பாடலில், எண்ணுவதற்கு அரிய குணங்களை உடைய ஐம்பொறிகளை வென்றவனுடைய திருவடிகளை வணங்காவிட்டால், அறிவைப் பெறும் வாயில்களாகிய ஐம்பொறிகளால் பயனில்லை என்பதை விளக்குகிறார்.

"தலையே நீ வணங்காய்
தலை மாலைப் பிறக்கணிந்து
தலையாலே பலி தேறும்
தலையே நீ வணங்காய்" – என்று தலையின் பயனைச் சொல்லியுள்ளார்.

எண்குணத்தானுடைய திருவடிகளை வணங்க வேண்டுவது தலையினுடைய குணம் என்பதைச் சொல்லியுள்ளார்.

இதில் எண் குணம் என்பது, தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்று முணர்தல், இயல்பாகவே, பாசங்களினீங்குதல், பேரளுடைமை, முடிவிலாற்றல் உடைமை, வரம்பிலின்பம் உடைமை எனப் பரிமேலழகர் எண் குணத்திற்கு அருமையாக விளக்கம் சொல்லுகின்றார். இந்த எட்டு வகையான குணங்களையும் பெற்றிருப்பவன் தான் இறைவன். அத்தகையவனை வணங்குவதே தலையினுடைய குணமாக இருக்க வேண்டும் என்று சொல்லுவதை நாம் உணர வேண்டும்.

**இல்வாழ்க்கையில் தலை:** இல்லின் கண் இருந்து அறம் முதலியன செய்தல் இல்லறத்தின் பயன். இல்லாளோடு கூடிவாழ்தலினது சிறப்பு என்கிறார் பரிமேலழகர்.

இந்த அதிகாரத்தில், தலை என்று முடியும் குறள்கள் இரண்டு.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை" (குறள் - 43)

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (47)

பிதிரர், தேவர், விருந்தினர், சுற்றத்தார் தானென்று சொல்லப்பட்ட ஐந்திடத்துஞ் செய்யும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறமாம் என்கிறார் பரிமேலழகர்.

ஏழைகள், ஐம்புலன்களையும் அடக்கிய துறவிகள், விருந்தினர், உறவினர், தன் குடும்பம் ஆகிய ஐவகைப்பட்டவர்களையும் அறநெறி தவறாமல் காப்பாற்றுதல் இல்லறத்தான் கடமையாகும் என்கிறார். (மவாண்கிள்ளி, திருக்குறள் புதிய தெளிவுரை பக்.16) இங்குத் தலை என்பது பிறந்த கடமை என்ற பொருளில் வருகிறது.

இந்தியப் பண்பாடு என்பதே முன்னோர்களையும் விண்ணோர்களையும் தொழுதல், உபசரித்தல், தேவர்களுக்கு அளித்தல், அவியுணவு, அவர்களை நினைத்து உணவு படைத்து ஆகியனவாம். தேவர்களுக்கு அவியுணவு அளித்தல். அக்னி வளர்த்து, அதிலே பொருள்களை இட்டால் அந்த உணவே தேவர்களுக்கு உணவு. அப்போது தேவர்கள் மகிழ்ச்சி அடைவர். தேவர்கள் மகிழ்ச்சி அடைந்தால் மக்களும் மகிழ்ச்சி அடைவர் என்பது நம்பிக்கை. எனவே, இவர்களை எல்லாம் வரவேற்று, உபசரித்து அவர்களுக்கு உணவு கொடுப்பதிலே மகிழ்ச்சி அடைவது என்பது மரபு

வழியாக பரம்பரை பரம்பரையாக நடந்து வரும் ஒன்றாகும். இந்த வகையிலே ஐந்து பேருக்கும் அறநெறியை வழுவாமல் செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறப்புடைய அறம்.

பிதிரர், தேவர்கள் இவர்களுக்கு பதிலாக ஏழைகள், முனிவர்கள் என்று சொல்வதும் இக்காலத்திற்குப் பொருந்தும் வகையாக உள்ளது எனலாம்.

"உண்டி முதற்றே உணவின் பிண்டம்" — (புறம் 18)

உடம்பாரழியின் உயிரார் அழிவர் — (திருமந்திரம் 24)

தனக்கு மிஞ்சித் தானம் - என்பதால், பிறருக்கும் தொண்டு செய்து, தன்னையும் தன் குடும்பத்தையும் பேணுதலே அறமாகும்.

அடுத்து,

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்

முயல்வாருள் எல்லாம் தலை" (குறள்-47)

அறநெறியில் நின்று இல்வாழ்க்கை வாழ்பவன் என்று சொல்லப்படுபவன், பற்றற்ற துறவிகளை விட உயர்ந்தவன் ஆவான். இங்குத் தலை என்பது, உயர்ந்த, சிறந்த என்ற பொருளைக் கொண்டு வருகிறது.

**வாழ்க்கைத் துணை நலம்:**

"சிறை காக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர்

நிறைகாக்கும் காப்பே தலை" — (குறள்-57)

சிறை வைத்துக் காக்கும் காவல் எந்தவொரு பயனையும் தராது. ஆகையால் மகளிர், கற்பு என்னும் மனவுறுதியைக் காப்பாற்றுவதே சிறந்ததாகும். இங்குப் பெண்களின் ஒழுக்கம் என்பது அவர்கள் தாமாக விரும்பி ஏற்றுக் காக்கும் ஒன்றாக இருக்க வேண்டுமே அல்லாமல், அது காவலாலும் கட்டுப்பாட்டாலும் அமைவதன்று என்கிறார்.

சிறை காப்பாவது இரவும் பகலும் வீட்டை விட்டு வெளியேறாமல் காவல் செய்தல். நிறை என்பது மனத்தைக் கற்பு நெறியில் நிறுத்துதல் என்பர். (தேவநேயப் பாவாணர், தமிழ் மரபுரை. பக்.72)

கற்புடைய மனைவியால் கணவன் மதிக்கப்படவில்லை.

"செயிர்தீர் கற்பிற சேயிழை கணவ" (புறம். 3:6)

"அறம் பாடிற்றே ஆயிழை கணவ" (புறம். 34.7)

"சேணாறு நல்லிசைச் சேயிழை கணவ" (பதிற். 88.39)

என்ற அகப்பாடல்களால் உணரலாம்.

இங்குத் தலை என்பது சிறந்த என்ற பொருளில் அமைகிறது.

**பொறையுடைமை** : "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (குறள்-151)

தன்மேல் நின்று கொண்டு தன்னைத் தோண்டுகின்றவர்களையும் பொறுத்துக் கொண்டிருக்கும் நிலத்தைப் போல, தம்மை இகழ்கின்றவர்களையும் பொறுத்துக் கொள்ளுதல் தலை சிறந்த பண்பாகும்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் பொறுமை மிகமிகத் தேவையான குணமாகும். பொறுத்தார் பூமியாள்வார். பொங்கினார் காடாள்வார் என்று முன்னோர்கள் கூறுவர். பொறுமை என்னும் நகை அணிந்து பெருமை கொள்ள வேண்டும் பெண்கள் என்றும் சொல்லுவர். ஆண் பெண் எல்லோருக்கும் பொறுமை என்பது மிகமிக அவசியமான ஒன்றுதான். இதிலும் ஆண்களைக் காட்டிலும் பெண்கள், பொறுமை என்று சொல்லும் குணத்தை அணிகலனாக அணிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் குடும்பத்தில் பெருமை வந்து தங்கும் என்று சொல்லாமல் சொல்கிறார்.

பகைவனுக்கும் அருள்வாய் நன் நெஞ்சே என்று பாரதியார் கூறுகிறார்.

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு என்று சொல்கிறது கிறித்தவம். இப்படி எல்லாம் எதற்காகக் கூறினார்கள் என்றால் பொறுமையாக இருக்க வேண்டும். பொறுத்துக் கொள்ளக் கூடிய பண்பு நம்மிடம் வளர வேண்டும் என்பதற்காகத்தான்.

இந்தக் காலத்தில் பொறுமை என்பதே கிடையாது. காலையில் இருந்து மாலை வரை டென்சன் டென்சன் தான். அன்றாட வாழ்க்கையில் பலரைப் பார்க்கிறோம். பல பிரச்சனைகளைச் சந்திக்கிறோம். அவசர அவசரமாக ஓடிக் கொண்டிருக்கிறோம். பொறுமையாக நின்று நிதானமாகப் போவதும் இல்லை. பேசுவதும் இல்லை. எல்லாவற்றிலும் ஒரு வேகம் தான். பற்றுதலே இல்லாத ஒரு வேகம் தான். இது நமக்கும் நல்லதல்ல. நாட்டிற்கும் நல்லதல்ல.

இங்குத் தலை என்ற சொல் சிறந்த என்ற பொருளையே கொண்டுள்ளது.

**வாய்மை :**

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ் செய்வாரின் தலை (திரு.295)

மனச்சான்றின்படி, ஒருவன் உண்மை பேசுவானாயின் தவம் செய்வதோடு கொடையும் செய்பவர்களைவிட உயர்ந்தவன் ஆவான்.

வாய்மை என்றாலே வாய்+மை எனப் பிரித்து வாயின் தன்மை எனப் பொருள் கொள்ளலாம். வாயின் தன்மை என்பது வாயினால் உண்ணப்படும் சுவை. வாயினால் பேசப்படும் சொல். இவை சரியானதாக நன்மை பயக்கக்கூடியதாக இருக்க வேண்டும். வாயிலிருந்து வரக்கூடிய சொற்கள், குற்றமற்ற சொற்களாக, மற்றவர்களைப் புண்படுத்தாத சொற்களாக, மெய்ம்மைச் சொற்காளாக, தீங்குதரக் கூடாத சொற்களாக இருக்க வேண்டும். இதற்காக நாம், நம் மனத்தையும் சீர்படுத்திக் கொள்ள வேண்டும்.

“மனம் மொழி மெய்யாலே” – என்பது போல மனம் நல்லதையே நினைக்க வேண்டும். பேசும் சொற்கள் நல்லதாகவே இருக்க வேண்டும். செய்யும் செயலும் நல்லதாகவே இருக்க வேண்டும். இதைத்தான் எல்லா மத இலக்கியங்களும், எல்லா மொழி இலக்கியங்களும் நமக்குச் சொல்கின்றன. எனவே நல்லவற்றையே எண்ணுவோம். நல்லவற்றையே பேசுவோம். நல்லவற்றையே செய்வோம்.

இப்படி, மனதால் நல்லவற்றையே நினைத்து நல்லவற்ளை வாயால் பேசுபவர்கள், தவம் செய்வதோடு கொடையும் செய்பவர்களைவிட உயர்ந்தவர்களாகக் கருதப்படுவார்கள். இதன்படி, உலகில் தவம் செய்தவர்கள் உயர்ந்தவர்கள். தானம் செய்பவர்கள் உயர்ந்தவர்கள். இவர்கைக் காட்டிலும், மனத்தால் நல்ல சொற்களைப் பேசுபவர்கள் உயர்ந்தவர்கள் என்கிறார் வள்ளுவர்.

இங்குத் தலை என்ற சொல் உயர்ந்த என்ற பொருளில் அமைந்துள்ளது.

**இன்னா செய்யாமை :**

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை (திரு.317)

எக்காலத்தும், யாவர்க்கும் சிறிய அளவில்கூட, மனத்தால் எண்ணிய துன்பம் தரும் செயல்களைச் செய்யாதிருத்தல் தலையாய அறமாகும்.

இன்னாதவற்றை மனத்தாலும் நினைக்கக் கூடாது. செய்யவும் கூடாது. எந்த நேரத்திலும் யாராக இருந்தாலும் எள்ளளவு கூட செய்யாமையே தலை சிறந்த அறம் என்பதை விளக்குகிறார்.

மனத்தொடு கூடிய செயல் என்பது அறிந்து செய்யும் செயல். மனம் அறிந்து செய்தல் குற்றம் என்கிறார். மாணா என்பது தீய செயல்களைச் சிறிதும் செய்ய நினைக்கக் கூடாது.

“சிறு பொறி பெருந்தீ”

“சிறு நஞ்சம் பெருந்தீங்கு செய்யும்”

எனவே சிறு வினையும் தீயது தீவனையே என்ற கருதி, எனதைத்தானம் என்ற சொல்லை இங்கு பயன்படுத்தி உள்ளார் வள்ளவர்.

இங்கு, தலை என்பது தலைசிறந்த, தலையாய எனும் பொருளியல் வந்துள்ளது.

**கொல்லாமை :**

ககுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலேபர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை (திரு. 322)

பலருக்கும் கொடுத்து, தானும் உண்டு, பல உயிர்களைக் காப்பாற்றுதல், அறநூல் வல்லார். கொகுத்துக் கூறிய அறங்கள் எல்லாவற்றிலும் சிறந்த அறமாகும்.

மனிதன் நாடோடியாக முதன் முதலில் வாழந்து வந்தான். பின் நாடோடி வாழக்கையிலிருந்து விலகி ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்டான். இவ்வித வாழ்வு

முறையை முதன் முதலில் ஆற்றங்கரை ஓரத்தில் தொடங்கி வாழ்ந்தான். தனித்தனியாக வாழ்ந்த மனிதன் பின் சேர்ந்து வாழ ஆசைப்பட்டான். இதன் விளைவாக, ஒரு புதிய சமுதாயத்தைத் தோற்றுவித்தான். சேர்ந்து வாழுகின்ற போது, ஒருவருக்குக் கிடைத்ததைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற புதிய சிந்தனை விரிய ஆரம்பித்தது. இக்கருத்தை வலியுறுத்துவதுதான் இச்செய்யுள் இருப்போர் இல்லோர் என்ற பாகுபாடின்றி, கிடைத்ததைப் பகிர்ந்துண்டு வாழ்தல் அந்நூலார் வகுத்த அறங்களுள் தலையாய அறம். திருக்குறளின் ஆணிவேராகத் திகழ்வது இந்தக் குறள் தான்.

திருவள்ளுவர் வாழ்ந்த அந்தக் காலத்திலேயே தனி உடைமைக் கொள்கைக்கு எதிரான கருத்தைத் துணிந்து கூறியுள்ளார். உலகிலேயே முதன் முதலாகப் பொது உடைமைக் கருத்திற்கு அடித்தளம் அமைத்துத் தந்தவர் வள்ளுவர்தான். அதனால்தான் உலகின் சிந்தனையாளர்களுள் திருவள்ளுவரே முதல் இடத்தைப் பெறுகின்றார். இந்தக் கொள்கைக்கு முழு வடிவம் தந்தவர் காரல் மார்க்ஸ். இந்தக் கொள்கையைச் செயலாக்கம் செய்து காட்டியவா உலக மாமனிதர் லெனின் அவர்கள். (முப்பால் இன்பம் பொன். அய்யனாரப்பன்)

கொல்லா அறத்தைக் கடைபிடித்தல் கொலையை நீக்குதல். கொலை உடல் சிதைத்துக் கொல்லுதல், உணவளியாமல் கொல்லுதலுமென இருவகை. உண்ணாத உயிர் இறக்குமாதலின் ஓம்புதல் என்றார். உணவளித்துச் சிறத்தல் போல் சிறந்த நன்மை வேறின்மையின் தலை என்று இங்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

இங்குத் தலை என்பது சிறந்த என்ற பொருளில் அமைந்துள்ளது.

“நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலைஅஞ்சிக்

கொல்லாமை சூழ்வான் தலை” (திரு. 325)

வாழ்க்கையின் நிலையாமையைக் கண்டு, பற்றற்ற துறவிகளுள் எல்லாம், கொலைத் தொழிலுக்கு அஞ்சிக் கொல்லாமையை மேற்கொள்பவரே சிறந்தவர் ஆவார்.

வாழ்க்கையில் பற்றற்ற நிலையில் துறவிகள் இருப்பார்கள். அவர்கள் எப்பொழுதும் பிற உயிர்களைக் கொலை செய்யும் தொழிலுக்கு அச்சப்பட வேண்டும். அவர்கள் தான் துறவிகளுள் சிறந்தவர் என்கிறார் வள்ளுவர். சாதாரண மனிதர்களில், சராசரி மனிதனாக இருப்பவன் தவறு செய்வான். சராசரி மனிதனுக்கு மேலான நிலையில் இருப்பவர்கள் தாம் பற்றற்ற துறவிகள். இவர்கள் எப்பொழுதும், கொலைத் தொழிலுக்கு அச்சப்படவேண்டும். கொலைத் தொழிலைச் செய்யக் கூடாது.

கொலைத் தொழிலைச் செய்வதற்கும் தூண்டும் கோலாக இருக்கக் கூடாது என்பது தான் வள்ளுவர் கூறியுள்ளது. நமக்கெல்லாம் கிடைத்த அழியாச் சொத்து என்றே சொல்லலாம்.

**பொருட்பாலில்**

**கேள்வி :**

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை (திரு.411)

எத்தனையோ வகையான செல்வங்களில் கேட்டு அறியும் கேள்வி அறிவே சிறந்த செல்வம். அக்கேள்விச் செல்மாகிய அறிவே, செல்வங்கள் எல்லாவற்றையம் விட முதன்மை வாய்ந்த செல்வமாகும்.

வாழ்க்கையில் மாடு மனை இருக்கலாம். காடு கழனி இருக்கலாம். குழந்தைகள் பல இருக்கலாம். காசு பணம் இருக்கலாம். இவை எல்லாவற்றையும் விட, கேட்டறிதலாகிய கேள்விச் செல்வம் தான் சிறந்தது என்பதையே வள்ளுவர் வகுத்துக் கூறியுள்ளார். எனவே, ஒவ்வொருவரும் கேட்டு அறிதலாகிய கேள்விச் செல்வத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

செல்வங்கள் இருவகையும், மூவகையும், எண்வகையும் பதினாறு வகையுமாகச் சொல்லப்படுவன. இதில் கேடில் விழுச் செல்வம் கல்வி என்பதும் மாடல்ல மற்றையவை என்பதையும் இங்கு எண்ணிப் பார்க்கின் தலைசிறந்த செல்வம் கேள்விச் செல்வம் என்பதை உணரலாம்.

இங்குத் தலை என்பது தலை சிறந்த என்ற பெருளில் அமைந்துள்ளது.

**பெரியாரைத் துணைகோடல்**

தம்மில் பெரியார் தமரா ஒழுகுதல்

வன்மையுள் எல்லாம் தலை (திரு.444)

தம்மைவிட, ஆற்றலுடைய பெரியோர்களைத் துணையாகக் கொண்டு, அவர்களின் வழியில் நடத்தல், வல்லமைகள் எல்லாவற்றையும் விடச் சிறந்தது.

நம்மிடம் எத்தனையோ வல்லமைகள் இருந்தாலும் கூட, ஆற்றலையுடைய பெரியவர்களை நமக்குத் துணையாகக் கொண்டு, அவர்களின் வழியில் நடத்தல் தான் நாம் பெற்றிருக்கும் வல்லமைகள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும். பெரியவர்கள் அனுபவத்தால் அனைத்தையும் அறிந்தவர்கள். அறிவு ஆற்றல் மிகுந்த அவர்களின் சொற்களை ஏற்றுக் கொண்டு, அவர்களுடைய கொள்கைப்படி வாழ்தல் சிறப்பு என்பதாகும்.

இங்கு, தலை என்பது சிறப்பு என்பதாகும்.

**காலம் அறிதல்:**

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை (திரு. 488)

பகைவரைக் கண்டால், தக்க காலம் வரும்வரை காத்திருக்க வேண்டும். பகைவருக்கு இறுதிக்காலம் வரும் போது மாய்ப்பர்.

எந்த ஒரு செயலையும் காலம் பார்த்துச் செய்ய வேண்டும். எந்தக் காலத்தில் எந்தச் செயலைச் செய்ய வேண்டும் என்பது இருக்கிறது. அதன்படி செய்தால் இந்த உலகத்தையே பெற நினைத்தால் கூட பெறமுடியும். எனவே நாட்டை ஆளக் கூடிய மன்னர்களாயினும், தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களாக இருந்தாலும் காலமறிந்து, காத்திருந்து செயலைச் செய்வது தான் சிறப்பு என்கிறார்.

இங்கு, தலை என்பது தலைகீழாக என்ற பொருளில் அமைகிறது.

**கண்ணோட்டம்:**

ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணும் கண்ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை. (திரு. 579)

தண்டித்து வருத்த வேண்டிய தீக்குணம் உடையவர்களிடத்தும், கண்ணோட்டம் கொண்டு பொறுத்துக் கொள்ளும் பண்பே சிறந்த பண்பாகும்.

கண்ணோட்டம் என்பது இரக்கக் குணம். இயல்பாகவே தீயகுணம் கொண்டவர்கள் இருப்பார்கள். இவர்களிடமும் நாம் இரக்கக் குணம் காட்டி, பொறுமையைக் காப்பது நமக்குச் சிறப்பு என்பதை எடுத்துரைக்கிறது.

இந்தியா சீனாவின் வரம்பு கடந்த நடத்தையைப் பொறுத்துக் கொண்டு போவதையும், இந்தியா பாகிஸ்தான் தாக்குதலைப் பொறுத்துக் கொண்டமைவதையும் எடுத்துக் காட்டுக்குச் சொல்லி உணரலாம்.

**வினைத் தூய்மை:**

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. (திரு. 657)

பழிமூட்டைகளைச் சுமந்து கொண்டு அடைந்த செல்வத்தை விட, அறிவு நிறைந்த சான்றோர்கள் தூய்மையான செயலைச் செய்து அடைந்த வறுமையே உயர்ந்தது.

நாம் எப்பொழுதும் தூய்மையான செயல்களைச் செய்ய வேண்டும். மனத்தூய்மையும் வேண்டும். செயல்தூய்மையும் வேண்டும். இதனால் வரக்கூடிய செல்வம் தான் சிறந்தது. மகிழ்ச்சி தருவது. பழியோடு சேர்க்கும் செல்வம் மகிழ்ச்சி தராது. நற்செயலோடு சேர்க்கும் செல்வம் குறைவாக இருந்தால் மனநிறைவைத் தரும் என்பன மிக அழகாகக் கூறியுள்ளார்.

புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்
பழிஎனின் உலகுடன் பெறினும் கொள்ளலர் (புறம்)

நம் முன்னோர்கள் புகழ் வருவதாயின் உயிரும் கொடுப்பர். பழி வருவதாயின் இவ்வுலகம் முழுதும் பெறுவதாக இருப்பினும் அதைச் செய்யார். இது நம் பண்பாக இருக்க வேண்டும் என்பதைச் சொல்கிறார்.

**தூது:**

கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து
எண்ணி உரைப்பான் தலை. (திரு. 687)

தன்னுடைய கடமையை அறிந்து, ஏற்ற காலத்தை அறிந்து, ஏற்ற இடத்தை அறிந்து ஆராய்ந்து சொல்ல வேண்டியதைச் சொல்பவன் தூதுவர்களில் தலைசிறந்தவன் ஆவான்.

தூது என்பதே, முக்கியமான செய்திகளை உரிய இடத்தில் உரியவர்களிடம் சொல்லுவதே ஆகும். இவர்களுடைய பொறுப்பு மிகமிகத் தலை சிறந்தது. இவர்களுக்கு ஆழ்ந்த அறிவு வல்லமை இருக்க வேண்டும். கடமைப் பொறுப்பு இருக்க வேண்டும். பேசும் வல்லமை இருக்க வேண்டும். எந்த இடத்தில் எதை எப்படிச் சொல்ல வேண்டும் என்ற வல்லமையும், காலம், இடம் அறிந்து சொல்லும் வல்லமையும் இருக்க வேண்டும். இதுவே அவர்களுக்குரிய சிறந்த பண்பு என்பதைச் சொல்கிறார்.

இங்குத் தலை என்ற சொல் சிறந்த என்ற பொருளில் அமைந்துள்ளது.

**நாடு:**

கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா
நாடென்க நாட்டின் தலை. (திரு. 736)

பகைவர்களால் கேட்டை அறியாததாகவும், ஒரு வேளை கேட்டை அடைந்தாலும் தன் வளம் குறையாத நாடு, நாடுகளுக்கெல்லாம் முதன்மையானது.

நாடு என்றால் பகைவர்களே இல்லாத நாடாக இருக்க வேண்டும். ஒரு வேளை பகை இருந்து, நாடு அழிதந்தாலும், அந்த அழிவைச் சரிகட்ட அந்த நாட்டை முன்பிருந்த நிலைக்கே கொண்டு வர, நாட்டில் வளம், பொருட்செல்வம் குறையாத நாடாக இருக்க வேண்டும். இது நாட்டிற்குச் சிறப்பு.

இரண்டாம் உலகப் பெரும் போரிலே ஜப்பான் தரை மட்டமாய் அழிந்தது. ஆனால் செல்வச் செழிப்பு இருந்ததால், நிர்வாகத் திறம் இருந்ததால், குறுகிய காலத்திலேயே பழைய நிலைக்குக் கொண்டு வர முடிந்தது. இதுபோல் தான் நாடென்றால் இருக்க வேண்டும் என்பதைச் சொல்கிறார்.

நாடு கேடறியாமை என்பது கடவுள் வழிபாட்டாலும், அறவொழுக்கத்தாலும், அரசனாற்றலினாலும் செங்கோலாட்சியாவும் அமைவன. நால்வகை நிலத்தும் இயற்கையாக, செயற்கையாக, விளையும் உணவும் பிறலுவுமாகிய பொருள் மிகுதி. வளம் குன்றா என்பது நீர்வள, நில வளத்தால் விளையும் நெல், கரும்பு, வாழை, மஞ்சள், இஞ்சி, வெற்றிலை, பாக்கு முதலியன. மலையில் விளைவன ஏலம், கிராம்பு, மிளகு, அகில், தந்தம், மரம், பொன், முத்து, பவழம் முதலியன. கடலில் விளைவன உப்பு, மீன், இறா, சங்கு, முத்து, பவழம் முதலியன. இவையெல்லாம் ஒரு நாட்டின் குன்றாத வளமாகும்.

இங்குத் தலை என்ற சொல் முதன்மை என்ற பொருளில் அமைந்துள்ளது.

**படைமாட்சி:**

உறுப்பமைந்து ஊறு அஞ்சா வெல்படைவேந்தன்
வெறுக்கையுள் எல்லாம் தலை. (திரு. 761)

நால்வகைப் படைகளும் நிறைந்து செய்யும் போரில் ஏற்படும் துன்பங்களுக்கு அஞ்சாமல் போரிட்டு வெல்லும் படையானது, அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் முதன்மையான செல்வமாகும்.

இங்குங் படை என்பது நால்வகைப்படை. கரிபரிதேர்கால் எனினும் உறுப்பமைந்து என்று பொதுப்படச் சொன்னதால், நீர்ப் படையையும் கொள்ளலாம்.

“நளியிரு முந்நீர் நாவாயோட்டி
வளிதொழிலாண்ட வுரவோன் மருக” (புறம். 66)
என்று கரிகால் வளவனையும்
வலம்படுமுரசிற் சேரலாதன்
முந்நீரோட்டிக் கடம்பறுத்து (அகம். 127)
உடைதிரைப் பரப்பின் படுகடலோட்டிய
வெல்புகழ் குட்டுவன். (பதிற. 41)
“காந்தளூர்ச் சாலை கநலமறுத்தருளி”

என்று இராசராசன் கல்வெட்டும், கடல் பசைட் செல்வத்தின் சிறப்பினைச் சொல்லுகின்றன. போர்க்காலத்திற்கு மட்டுமல்லாமல், நாட்டிலே, பாதுகாப்பைக் கடைப்பிடிக்கவும், குழப்பமோ, இயற்கைச் சீற்றமோ, செயற்கைக் கேடுகளோ நடக்கும் போது, படைபலம் இருந்தால் ஆவன செயல்களை உடனுக்குடன் செய்து நாட்டிலே

அமைதியை உருவாக்க முடியும். எனவே, நாட்டின் செல்வங்களுள் படைபலச் செல்வமே சிறந்த செல்வம் என்பதை, அண்மையில் நடந்த "சுனாமி" யாலும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

இங்குத் தலை எனும் சொல் சிறந்த என்ற பொருளில் வந்துள்ளது.

**தீ நட்பு:**

அமர்அகத்து ஆற்று அறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. (திரு. 814)

போர்க்களத்தில் தன்மேல் உள்ள வீரனைக் கீழே தள்ளிவிட்டுப் போகும் போர்ப் பயிற்சி கற்காத குதிரையைப் போன்றவர்களுடன் நட்புக் கொள்வதை விடத் தனிமையாக இருத்தலே சிறப்புடையதாகும்.

நாடு என்று சொல்லும்போது, நாட்டிற்கு நல்ல நாடுகளே நட்புடைய நாடுகளாக இருக்க வேண்டும். கூட இருந்து குழிதோண்டும் நாடுகள் நட்பாக இருக்கக் கூடாது. தீய நாடுகளோடு சேர்ந்திருப்பதைக் காட்டிலும் தனியாக நின்று வல்லமை உடைய சிறந்த நாடாக இருப்பதே சிறப்பு என்பதைச் சொல்கிறார்.

இங்குத் தலை என்பது சிறந்த என்ற பொருளில் அமைந்துள்ளது.

**இகல்:**

பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னா செய்யாமை தலை. (திரு.852)

ஒருவன் தன்னோடு பொருந்தாமையைக் கருதி, வெறுப்பன செய்தாலும், மற்றவர்கள் மாறுபாடு காரணமாக அவனுக்குத் துன்பம் தரும் செயல்களைச் செய்யாமல் இருத்தல் சிறந்த பண்பாகும்.

இகல் என்றாலே மாறுபாடு. நம்முடன் மாறுபட்டு இருப்பவர்களுக்கும் நாம் துன்பம் தரும் செயல்களைச் செய்யாமல் இருப்பதே சிறப்பு என்கிறார். இங்குத் தலை என்ற சொல் சிறப்பு என்ற பொருளில் அமைந்துள்ளது.

**பெரியாரைப் பிழையாமை:**

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை (திரு. 891)

சிறந்த வல்லமை உடைய பெரியார்களின் வல்லமையை இழக்காமல் இருக்க வேண்டும். அவ்வாறு இருத்தல் தமக்குத் தீங்கு வராமல் காப்பவருடைய காவல்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்ததாகும்.

வாழ்க்கையில் என்றும் பெரியவர்களை இகழக் கூடாது. பெரிவர்களுடைய வழிகாட்டுதல் நமக்கு என்றுமே தேவை. நம்முடைய பிற பாதுகாவர்களை விடப் பெரியவர்களை இகழாமல் இருப்பது நமக்குச் சிறந்த பாதுகாவல் என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகிறது.

**உழவு:**

'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை' (குறள்-1031)

உழவுத் தொழில் செய்வதால் உண்டாகும் உடல் வருத்தத்தைக் கருதி. பிற தொழில்களைச் செய்து வாழ்ந்தாலும் முடிவில் உழவுத் தொழில் செய்பவரையே உலகம் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆகையால் உடலில், உடலால் வருந்தினாலும் உழவுத் தொழிலே தலைசிறந்த தொழிலாகும்.

வேளாண் மாந்தர்க் குழுதூணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி (தொல்கா. 1581)

இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர். (சிலம்பு. 10:149-50)

என்று கூறியிருப்பதிலும் உழவின் மேன்மை விளங்கும்.

உலகை வாழ வைப்பது, உலக மக்களுக்கு உணவைக் கொடுப்பது, உடல் வளர்ச்சியைக் கொடுப்பது, நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவது உழவுத் தொழில்தான். உணவில்லையேல் உயிர் வாழ இயலாது. பிற தொழில்கள் செய்து நகரங்களில் வாழ இயலாது. எனவே வளம் தரும் எத்தனை தொழில்கள் இருந்தாலும்

நலம் தரும் உழவுத்தொழில்தான் தலை சிறந்தது. நம்மை வாழ வைக்கும் தொழில் உழவுதான் என்பதை வள்ளுவர் விளக்கியுள்ளார்.

இங்குத் தலை என்பது சிறந்த என்ற பொருளில் அமைந்துள்ளது.

இந்தப் பத்தொன்பது அதிகாரங்களில், 21 செய்யுட்களில் வள்ளுவர் கூறும் சிறந்த தலையாய செய்திகள் எவை என்பதைப் பாத்தோம். இவையெல்லாம் வாழ்க்கையில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும்.

இதில் முதலாவது கடவுள் வாழ்த்து எனும் அதிகாரத்தில் மட்டும் (குறள்.9) தலை என்பது மக்களுடைய தலையைக் குறித்தது. மற்ற இருபது செய்யுட்களிலேயும் வரும் 'தலை' என்ற சொல் சிறந்தது என்னும் பொருளிலேயே அமைந்துள்ளது. தலை என்றிருந்தால் எண் குணத்தானை வணங்கும் தலையாக இருக்க வேண்டும் என்கிறார்.

இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தில் இல்வாழ்க்கை நடத்துபவன் செய்யக்கூடிய சிறப்புடைய அறம், எது என்றும், அறநெறியில் வாழ்பவரே உயர்ந்தவன் ஆவான் என்பதைச் சொல்கிறது.

**வாழ்க்கைத் துணை நலம்:** வாழ்க்கைக்குத் துணையாக, நலமாக இருக்கும் மகளிர், கற்பு என்னும் மனவுறுதியைக் காப்பது சிறந்தது என்பதைச் சொல்கிறது.

பொறையுடைமை என்ற அதிகாரம் மனச்சான்றோடு பேசுபவனே உயர்ந்தவன் என்பதைச் சொல்கிறது.

வாய்மை என்ற அதிகாரம் மனச்சான்றோடு பேசுபவனே உயர்ந்தவன் என்பதைச் சொல்கிறது.

இன்னா செய்யாமை என்ற அதிகாரத்தில் துன்பம் தரும் செயல்களைச் செய்யாமல் இருப்பதே தலை சிறந்த அறமென்கிறார்.

கொல்லாமை அதிகாரத்தில் பகுத்துண்டு பல உயிர்களைக் காப்பதே தலைசிறந்த அறம் என்கிறார்.

இப்படி, வள்ளுவர், அறத்துப் பாலிலே. நாள் தோறும் இறைவனைத் தலையால் வணங்கி, இல்லற வாழ்க்கையில் அறம் செய்து. வாழ்க்கைத் துணையாக, கற்பு நெறி காத்து நல்லறங்கள் செய்ய வேண்டும். பிற உயிர்களைக் கொல்ல அச்சப்பட வேண்டும் என்ற கருத்துக்களை மிக அழகாக அறத்துப்பாலிலே ஒன்பது செய்யுள்களில் தலை சிறந்த கருத்துக்களைச் சொல்லியுள்ளார். வாழ்க்கையில் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்கவேண்டும் என்ற அறத்தைச் சொல்லியுள்ளார்.

அடுத்து பொருட்பாலில் பன்னிரண்டு அதிகாரங்களில் நாட்டை ஆளும் மன்னனுக்கும் நாட்டிற்கும் வேண்டிய சிறந்த கருத்துக்களைச் சொல்லியுள்ளார்.

கேள்வி என்ற அதிகாலத்தில் கேள்விச் செல்வமே தலையாய செல்வம் என்றும், பெரியவர்கள் என்றும் காலமறிந்து எதையும் செய்யவேண்டும் என்பதையும் கருணைக் குணத்தோடு பொறுக்கும் பண்புகொண்டவளாக இருக்கவேண்டும் என்பதனையும், வினைத்தூய்மையில் பழியினால் வரும் செல்வத்தை விட, நற்செயலால் வரும் வறுமையே பெரியதென்பதனையும் தலை சிறந்த தூதுவன் தன்மையையும் கெட்டழிந்த போதும் வளங்குன்றா நாடே சிறந்த நாடு என்பதனையும் நாட்டிற்கு நல்ல படையே அரகசனுக்கு முதன்மையான செல்வம் என்பதையும், நல்ல நாடுகளே. நுாட்டிற்கு துணையாக நட்பு நாடுகளாக இருக்க வேண்டும் என்பதையும், தன்னோடு மாறுபாடு கொண்டோர்க்கும் துன்பம் செய்யலாகாது என்பதனையும், வல்லமையுடைய பெரியவர்களை இகழக்கூடாது என்பதனையும், பல வகையான கோடிக்கணக்கான தொழில்கள் இருந்தாலும் உழவுத் தொழிலே தலைசிறந்த தொழில் என்பதையும், 11 – செய்யுட்களில் விளக்கியுள்ளார் வள்ளுவர்.

ஆறத்துப் பாலில் சொன்ன கருத்துக்களை வாழ்க்கையிலும், பொருட்பாலில் சொன்ன கருத்துக்களை நாட்டு நடப்பிலும் கடைப்பிடித்து ஒழுகினால் வாழ்க்கை இன்பத்துப் பாலாக அமையும் என்பதால் இன்பத்துப் பாலில் தலை என்று முடியும் குறளை எழுதாது விட்டுவிட்டார்.

குறள் கூறிய சிறந்த கருத்துக்களைக் அனைவரும் வாழ்வில் கடைப்பிடித்து சிறப்படைய வேண்டும்.